**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| Case No | : | SC - 348/2022 |
| Prosecution Witness | : | PW-1 |
| Name | : | ஹதீஜாபீவி |
| Father Name | : | சாதிக்பாட்சா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 22.08.2028***

***எதிரிகள் 1,2,3, வருகை,***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் கும்பகோணம் மேலக்காவேரியில் வசிக்கின்றேன். வழக்கில் இறந்துபோன அப்துல் ரஜாக் என் தந்தை ஆவார். எனது அம்மா இறந்த பிறகு என் அப்பாவிற்கு துணையாக நான் இருந்து வந்தேன். எனது அப்பா நெடுந்தெருவில் வசித்து வந்தார். எனது அப்பா ராஜகிரியில் அப்பன்னா சன்ஸ் என்ற கைலி, பனியன் கடை நடத்தி வந்தார். அப்பா தனியாக இருந்ததால் அவருக்கு துணையாக அவருடன் நான் இருந்தேன். திடீரென என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதால் என் தகப்பனார் அறிவுறுத்தலின்படி அவரை பார்க்க மேலக்காவேரிக்கு சென்றேன். என் உடன் பிறந்தவர்கள் 4 அண்ணன்கள் அதில் முகம்மது ரபீக் என்பவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருந்தது. மற்ற மூவரும் வெளிநாட்டில் உள்ளனர். நான் என் தந்தைக்கு தினமும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எப்படி இருக்கிறார் என்று விசாரிப்பேன். கடந்த 07.04.2022 அன்று என் தகப்பனாருக்கு போன் செய்தபோது அவர் போன் எடுக்கவில்லை. என் பெரிய அண்ணன் முகம்மது ஆரிப் சம்பவத்திற்கு 10 நாள்கள் முன்புதான் வெளிநாட்டில்

இருந்தது வந்திருந்தார். என்னால் அப்பாவை தொடர்பு கொள்ள முடியாததால் என் அண்ணணுக்கு போன் செய்து அப்பா போன் எடுக்க மாட்டேங்குறார் என்ன ஆனது என்று சென்று விசாரிக்க சொன்னேன். என் அண்ணன் எனக்கு போன் செய்து அவர் சென்று அப்பா வீட்டில் பார்த்தபோது என் அப்பா கொலைசெய்யப்பட்டு குப்புறகிடந்தார் என்று சொன்னார். செய்தி தெரிந்ததும் உடனடியாக கிளம்பி நான் என் அப்பா வீட்டிற்கு சென்றேன். வீட்டில் அப்பா கொலை செய்யப்பட்டு அனைத்து பீரோக்களும் உடைக்கப்பட்டு அதிலிருந்த ரூ.50,000/- ரொக்கம், 15 பவுன் நகை, பீரோவில் உள்ள அனைத்து பொருட்களும் காணாமல் போயின. நகைகள் 4 மோதிரம், 4 தோடு, மாட்டல், ஜிமிக்கி, 2 செயின்கள், மூக்குத்தி இவைகள் அனைத்தும் என்னுடையது. காவல்நிலையத்திற்கு புகார் அளித்தேன். என்னிடம் காட்டுவது நான் கொடுத்த புகார்தான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. அது **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் காலம் 13ல் உள்ளது என்னுடைய கையெழுத்து அந்த கையெழுத்து மட்டும் **அதசாஆ2**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள நகைகள் என்னுடையதுதான். அவைதான் திருட்டுபோன நகைகள். அவை முறையே **அசாபொ1** முதல் **அசாபொ11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.பொ.1- பூ போட்ட மோதிரம். அ.சா.பொ.2 – ஒரு சிவப்புக்கல் மோதிரம் 1. அ.சா.பொ.3- லேடிஸ் மோதிரம் அ.சா.பொ4 – உருட்டு மோதிரம். அ.சா.பொ-5 தொங்கல் ஒரு ஜோடி. அ.சா.பொ.6 தோடு 1 ஜோடி. அ.சா.பொ7- மாட்டல் ஒரு ஜோடி. அ.சா.பொ.8 -செயின் 1. அ.சா.பொ9- மூக்குத்தி 1,அ.சா.பொ10- தோடு ஒரு ஜோடி, மாட்டல் ஒரு ஜோடி, மூக்குத்தி1. அ.சா.பொ.11 -தோடு ஜிமிக்கி ஒரு ஜோடி ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் போய் பார்த்தபோது என் அப்பாவின் கைகள் இரண்டையும் கைலியால் கட்டப்பட்டு பின்பு நீக்கப்பட்டிருந்தது. வாயில் பனியனை வைத்து அடைத்திருந்தார்கள். என் அப்பாவின் வாயின் அருகே அவரது வாயில் வைத்து திணித்திருந்த பனியன் இரத்தக்கரையுடன் இருந்தது. என் அப்பா கழுத்தில் கைலியை வைத்து கட்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஊதா மற்றும் வெள்ளை கலர் கலந்த கைலி சம்பவத்தின் போது அணிந்திருந்த கைலி. மற்ற மூன்று கைலிகளும் என் அப்பா உடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி-1 தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் கும்பகோணம் மாநகராட்சியில் கவுன்சிலராக இருக்கிறேன். நான் என் அப்பாவை பார்க்கபோகும்போது அங்கு யாரும் இல்லை அதற்கு பிறகு 10, 15 போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்களுடன் பெண் ஆய்வாளர் வனிதா என்பவரும் வந்தார். புகாரை காவல்நிலையத்தில்தான் கொடுத்தேன். 07.04.2022 காலை 11.30 மணிக்கு அப்பா வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது என் அண்ணன் அங்கு இருந்தார். மனநோய் பாதிக்கப்பட்ட அண்ணனும் என்னுடன் இருந்தார் அவரை சம்பவ இடத்திற்கு நான் அழைத்து சென்றேன். புகாரில் மனநோய் பாதிக்கப்பட்ட அண்ணனும் என்னுடன் இருந்தார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரில் மேற்சொன்னவாறு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மனநலம் பாதிக்கப்பட்ட அண்ணன் என் அப்பாவுடன் தான் இருந்தார் என்றும் அதனால்தான் புகாரில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரை என் கணவர்தான் எழுதினார். புகாரை நான் சொல்ல சொல்ல என் கணவர் எழுதினார். என் அண்ணன் எதுவும் சொல்லவில்லை. புகாரின் 2-ம் பக்கத்தில் 12 வரிகள் வேறு நபரால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. புகாரை காவல்நிலையத்தில் வைத்து எழுதினார். காவல்நிலையத்திற்கு என் அண்ணன் ஆரிப்பும் வந்தார். சம்பவ இடத்தில் எவ்வளவு பீரோக்கள் இருந்தது என்றால் 6 பீரோக்கள் உள்ளன. எனக்கும் என் தந்தையாருக்கும் தனித்தனி பீரோ. 3 பீரோவை உடைத்திருந்தார்கள். 3 பீரோ பூட்டாமல் இருந்ததால் உடைக்கவில்லை. முதல் விசாராணையில் நான் சொன்ன ரூ.50,000/- மற்றும் 15 பவுன் நகைகள் ஒரே பீரோவில்தான் இருந்தது. மற்ற பீரோக்களில் இருந்த துணிகள் எல்லாம் களைத்து கீழே போட்டு இருந்தார்கள். இவை அனைத்தையும் போலிசார் என் முன்னிலையில் எழுதிக்கொண்டார்கள். என் அப்பா பீரோவில் இருந்த வேறு பொருட்கள் ஏதேனும் காணாமல் போனதா என்றால் நகை மற்றும் பணத்தை தவிர என் அப்பா பீரோவில் சென்ட் பாட்டில், கைலியால் செய்த துணிப்பை, தைலம் போன்ற பொருள்கள் காணாமல் போகவில்லை. நான் மேலே சொன்ன பொருட்கள்தான் என் வீட்டில் இருந்த மதிப்பு மிக்க பொருட்கள். சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் கணவர் வீட்டிற்கு சென்றபோது அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே என் அப்பா ரம்ஜானுக்கு கைலி வாங்குவதற்கு பணம் வைத்திருப்பதாக சொல்லி என்னிடம் அந்த பணத்தை கொடுத்து பீரோவில் வைக்க சொன்னார். அந்த பணம் ரூ.500நோட்டுக்கள். பீரோவின் சாவி என் அப்பாவிடம்தான் இருந்தது. அதற்குபிறகு என் அப்பா கடையில்

வரவு செலவு சம்பந்தமாக எவ்வளவு பணம் செலவானது, என் தந்தையார் வைத்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த நெடுந்தெருவிற்கும் அய்யம்பேட்டை காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 கி.மீ இருக்கும். கும்பகோணத்திலிருந்து நெடுந்தெருகிராமத்திற்கு 30 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் கேள்விபட்டு கும்பகோணத்திலிருந்து காரில் வந்தேன். நான் பார்த்தபோது நான் முதல்விசாரணையில் சொன்ன கழுத்தில் கட்டப்பட்டிருந்ததாகவும் வாயில் பனியன் திணிக்கப்பட்டதாகவும் கைகள் பின்புறம் கட்டப்பட்டதாகவும் கூறியவை யாவும் நான் பார்த்தபோது இல்லை. துணிகள் பக்கத்தில் விழுந்திருந்தன. போலிசார் உடலை போட்டோ மற்றும் வீடியோ எடுத்தார்கள். முதலில் பார்த்த என் அண்ணன் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. நான் முதல்விசாரணையில் கையை கட்டியதாகவும் வாயை பனியன் வைத்து திணித்திருந்ததாகவும் கழுத்தை கைலியில் கட்டி நெருக்கியதாகவும் சொன்னது அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானே பார்த்தேன். நான் காவல்நிலையத்திற்கு சென்று எப்போது புகார் கொடுத்தேன் என்றால் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து அனைவரையும் வெளியே போக சொல்லிவிட்டு என்னை விசாரித்து அங்கேயே எழுதிக்கொண்டார்கள் காவல்நிலையத்திலும் எழுதிக் கொண்டார்கள். வீட்டில் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ரேகையும் கையெழுத்தும் வீட்டில் வாங்கினார்கள் எத்தனை என்று ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் எனது தந்தையாரை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிய பின்னர்தான் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு 1 மணிநேரம் இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அதசாஆ1 புகார் காவல்நிலையத்தில் உள்ளே வைத்துதான் எழுதப்பட்டது. நான் அசா1புகாரை சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது அல்ல. மனநோய் பாதிக்கப்பட்ட எனது சகோதரரால் எனது தந்தைக்கு ஏற்பட்ட மரணத்தை மறைப்பதற்காக தன்னுடைய பாதுகாப்பில் இருந்ததால் தனக்கும் ஏதாவது பின்விளைவு ஏற்படும் என்ற நோக்கத்தில் நான் அரசியல் செல்வாக்கு உள்ளதால் போலிசாரிடம் ஒரு பொய்யான புகாரை கொடுத்து அதை போலிசார் தாங்கள் வேண்டுகோளுக்கிணங்க சரியாக விசாரணை செய்யாமல் வழக்கை முடிக்க வேண்டும் என்பதற்காக தவறாக எதிரிகள் மீது வழக்கு

பதிவு செய்து குற்றஅறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சான்றுபொருள்கள் அனைத்தும் என்னால் போலிசாருக்கு கொடுக்கப்பட்டது என்றும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எனது சகோதரர் முகம்மது ரபீக் எனது தந்தையாருடன்தான் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் 2 மற்றும் 3 தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லாத காரணத்தினால் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.